இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

" சீடர்கள் அவர் அருகே வந்து, "ஏன் அவர்களோடு உவமைகள் வாயிலாகப் பேசுகின்றீர்?" என்று கேட்டார்கள். அதற்கு இயேசு அவர்களிடம் மறுமொழியாகக் கூறியது: "விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது; அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. உள்ளவருக்குக் கொடுக்கப்படும்; அவர் நிறைவாகப் பெறுவார். மாறாக, இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும்.' என்றார்.

(மத் 10: 13-12)

# சத்துணவுப் பற்றாக்குறையை வெற்றிகண்டு அனைத்து மனிதர்களுக்கும் மாண்பை வழங்க வேண்டும்



வத்திக்கான்: சத்துணவுப் பற்றாக்குறையை வெற்றிகண்டு அனைத்து மனிதர்களுக்கும் மாண்பை வழங்கும் ஒன்றிணைந்த நடவடிக்கையை அனைத்து நாடுகளும் மேற்கொள்ளவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஐ.நா.வின் உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தின் 43வது கூட்டத்தொடருக்கு FAOவின் திருப்பீடப் பிரதிநிதி, பேரருள்திரு Fernando Chica Arellano அவர்கள் வழியாக திருத்தந்தை அனுப்பியுள்ள செய்தியில், இன்றைய உலகில் ஆயுதம் தாங்கிய மோதல்களாலும், காலநிலை மாற்றங்களாலும், இயற்கைப் பேரிடர்களாலும் சத்துணவின்றி பல இலட்சக் கணக்கான மக்கள் தொடர்ந்து துயர்களை அனுபவித்து வருவதை அகற்ற, நாடுகளிடையே ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவை என வலியுறுத்தியுள்ளார்.



ஏழ்மை, சரிநிகரற்றதன்மை, உணவு, குடிநீர், நலஆதரவு, கல்வி, உறைவிடத்திற்கு வழியின்மை என்பவை மனித மாண்புக்கு எதிராகச் செல்பவை எனவும் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, அரசியல், பொருளாதார மற்றும் இராணுவ பதட்டநிலைகளால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அனைத்து முயற்சிகளும் தோல்வியைக் கண்டுவருகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

மக்களின் உணவுக்கு வழி செய்வது என்பது அவர்களுக்குரிய மாண்பை வழங்குவதாகும் எனக்கூறும் திருத்தந்தை, அரசுகள், தொழில் நிறுவனங்கள், கல்வி அமைப்புக்கள், அனைத்துலக நிறுவனங்கள், சமூக அமைப்புக்கள், தனியார்கள் என அனைவரும் ஒன்றிணைந்து இப்பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார்.

எவருக்கும் தினசரி உணவு கிட்டா நிலை உருவாகக்கூடாது என்பதில் திருப்பீடம் உறுதியாக இருப்பதாகவும், அதற்கான முயற்சிகளை தொடர்ந்து ஆற்றிவருவதாகவும் 43வது கூட்டத்தொடரில் பேரருள்திரு Chica Arellano அவர்களால் வாசிக்கப்பட்ட தன் செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## தாத்தா பாட்டிகள் தினம்

மேலும், ஜூலை மாதம் 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று திருஅவையில் தாத்தா பாட்டிகள் தினம் சிறப்பிக்கப் படுவதையொட்டி, அந்நாளில் உரோம் நேரம் காலை 10 மணிக்கு வத்திக்கான் புனித பேதுரு பெருங்கோவிலில் பொது மக்களுடன் திருப்பலி நிறைவேற்ற உள்ளார் திருத்தந்தை.

போர்த்துக்கல்லில் இடம்பெறவுள்ள 37வது உலக இளையோர் தினத்தையொட்டி ஆகஸ்ட் மாதம் 2ஆம் தேதி முதல் 6ஆம் தேதி வரை போர்த்துக்கல்லின் லிஸ்பனுக்கும், அதன்பின் பாத்திமா திருத்தலத்திற்கும் செல்ல உள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

31ஆம் தேதி ஆகஸ்ட் முதல் 4ஆம் தேதி செப்டம்பர் வரை மங்கோலியாவில் திருத்தூதுப்பயணம் மேற்கொள்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் என்றும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்*

# Canossian துறவர சபை நிறுவனரின் 250 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்

Magdalene என்பவர் 1774 ஆம் ஆண்டு இத்தாலில் பிறந்தார். சிறுவயது முதலே எளிய மக்களின் மீதுள்ள இரக்கத்தினால், அதிக பாசமும் அக்கறையும் கொண்டிருந்தார். இவர் ஒரு பெரிய செல்வந்தர் வீட்டில் பிறந்து வளர்ந்தாலும், இவருக்கு ஏழை-எளிய மக்களின் நலம் மீது ஈர்ப்பு இருந்தது. ஆகவே, இவர் 1808 ஆம் ஆண்டு, எளிய மக்களுக்கு பணி செய்ய வேண்டும் என எண்ணி, Canossian எனும் துறவர மடத்தை தொடங்கினார். அதில் இவர் முதல் துறவரத்தாராகவும் இணைந்தார். அதன் பின், தற்போது உலகளாவில் Canossian சகோதரிகள் தங்களின் பணிகளை மக்களுக்கு ஆற்றி வருகிறார்கள். இவர் தனது துறவறப்பணியை 27 வருடங்கள் கடந்து, 1835 ஆண்டு காலமானார். அதன்பின், 1988 ஆம் ஆண்டு, இரண்டாம் Pope John Paul அவர்களால் புனிதர் எனும் நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

இவரின் 250 பிறந்த நாள் கொண்டாட்டத்தை மலேசியாவில் உள்ள குளுவாங்கை தலைமையமாக கொண்ட canossian துறவர மடத்தின் கிளையான Jinjang, Kuala Lumpur இடத்தில் உள்ள துறவர சகோதரிகளால், கிறிஸ்து ஒளி ஆலயத்தில் மாலை 6.00 திருப்பலியில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இத்திருப்பலியை பங்கு குருவான அருள்தந்தை Peter Anthony அவர்கள் வழிநடத்தினார். அவரின் மறையுரையின் போது அவர் கூறியது, "பொதுவாக கத்தோலிக்க மக்கள் அருள்தந்தையர்களை வரவேற்கும் அளவுக்கு அருள்சகோதரிகளை வரவேற்பதில்லை என்பது தனக்கு வருத்தம் அளிக்கிறது என்றும் கூறினார்.

அருள்தந்தையருக்கு தத்தம் பங்குகளில் பிறந்த நாள் கொண்டாட்டம் உட்பட வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்கள். ஆனால், இவர்களை போன்ற அருள் சகோதரிகளின் பிறந்த நாளன்று அழைத்து கொண்டாடுகிறார்களா? அல்லது ஏதோ ஓர் அன்பின் நிமித்தம் உணவு கடைக்கு அழைத்து சென்று மகிழ்விக்கிறார்களா?

அருள்தந்தைகளும் மற்றும் அருள்சகோதரிகளின் அர்ப்பணிப்பு என்பது ஒன்றே. இருப்பினும் பங்குகளில் பணியாற்றும் அருள்தந்தைகளுக்கு கொடுக்கும் வரவேற்பும் பராமரிப்பும் அருள்சகோதரிகளுக்கு இல்லை என்பது தனக்கு வருத்தம் அளிப்பதாகவும்" மறையுரையில் குறிப்பிட்டார்.



இறுதியாக அருள்சகோதரி சாந்தி அவர்களின் உரையின் போது அவர் கூறியது உண்மையில் மனதை ஈர்த்தது. "எங்களின் துறவரத்தாரின் பணி ஒரு மனிதனின் பிறப்பிடமான கருப்பை தொடங்கி, அடக்கம் செய்யும் கல்லறை செல்லும் வரை எளிய மக்களுக்கானது" என்பது உண்மைதான், ஏனென்றால், Canossian துறவரத்தார் பல நாடுகளிலும் பலவித பணிகளை செய்து வருகிறார்கள். ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு, மழலையர் பள்ளி, முதியோர் இல்லம் மற்றும் மிகவும் மோசமான பகுதியில் வாழும் மக்களை சந்தித்து, அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு, அவர்களின் தேவைகளையும் முழுமை பெற செய்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்த Jinjang எனும் இடம் மிகவும் எளிய மக்கள் வாழும் இடம். இந்த வட்டாரம் கம்னியூஸ்டுகள் மட்டும் வாழ்ந்த இடம். இங்கு வெளி ஆட்கள் உள்ளே போக அஞ்சும் இடம் ஒருகாலத்தில். அப்போது இவர்கள் இங்கு பணியை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி அடுத்துப் பக்கம்

# கெனோசியன் துறவர சபை நிறுவனரின் 250 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்

மேலும், இங்குதான் அரசு ஏழை மக்கள் வாழும் சிறிய குடிசைகளான குடியிருப்பு பகுதிகளாக ஆயிரம்கணக்கான வீடுகளை கட்டி கொடுத்துள்ளது. இன்றளவும் அது உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, அருள்சகோதரி சாந்தியின் கூற்று



கெனோசியன் அருட்சகோதரிகளுடன் அருள்தந்தை பிட்டர் அந்தோணி அவர்கள்

முற்றிலும் உண்மை, சிறப்பு மிக்கது. தங்களின் வாழ்க்கையை அர்ப்பணித்து பிறர் நலம் கருதும் இவர்களின் பணி பாராட்டுக்குரியது. அதன்பின், ஆலயத்தில் இவர்களுக்கு பாராட்டு விழாவும் பங்கெடுத்தவர்களுக்கு உணவும் பரிமாறப் பட்டது.

இவ்விழாவிற்கு மாமறை மாவட்ட பேராயர் ஆயர் Julian Leow Beng Kim அவர்களும் வருகை தந்து, உரையாற்றியபோது, “இவர்களின் பாலர் பள்ளியில் இளம் வயதினர் பலரும் இணைந்து பணியாற்றுவது வியப்பளிக்கிறது என்றும், Canossian அருள்சகோதரிகள் சபையில் இளம் வயதினர் இணைந்திருப்பது தனக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்

*-இயேஸ்டி ஸ்டீபன், டேசா ஜெயா*

# ஜொகூர், உலுரெமிஸ் சிற்றாலயத்தின் புனித தோமா திருவிழா கொண்டாடப்பட்டது

**ஜொகூர் பாரு :** கடந்த 1.7.2023 சனிக்கிழமையன்று, இங்குள்ள உலுரெமிஸ் தோட்ட புனித தோமா (புனித தோமையார்) சிற்றாலயத்தின் 70ஆம் ஆண்டு திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது

மூன்று நாள் நவநாள் இறைவேண்டலுடன் துவங்கிய திருவிழா கொண்டாட்டத்தில் இரு அருள் பணியாளர்கள், மற்றும் ஏறகுறைய 300 நம்பிக்கையாளர்கள் பங்குபெற்றனர். இத்திருவிழாவில் மறையுறை ஆற்றிய அருள்தந்தை எட்ரியன் பிரான்சிஸ் அவர்கள் புனித தோமா முதலில் சந்தேகம் கொண்டவராக இருந்தாலும்



பின் உண்மையை அறிந்து, மனம் வருந்தி, மனமுவந்து ஆண்டவரை முழுமையாக ஏற்றுகொண்டார்.

இந்தியா வரை, குறிப்பாக சென்னை வரை சென்று தூதுரைப்பணியில் தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்தார். நாமும் அவர் போல் சந்தேகம் தெளிந்து



ஆண்டவர் மீது முழு நம்பிக்கை வைத்து சீடத்துவத்தை ஆழப்படுத்தி பணி செய்திட வேண்டும். அவர்கள் செய்வார்கள், இவர்கள் செய்வார்கள் என காத்திராது நமக்கு அருளப்பட்ட கொடையைக் கொண்ட பணிபுரிய அழைக்கிறது திருஅவை. புனித தோமாவின் முன்மாதிரியைக் கொண்டு அனைவரும் பங்கு இறைப்பணி நடவடிக்கைளில் பங்கெடுத்து புனித தோமாவின் வழியில் முன்மாதிரியாக வாழ முற்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இறைமக்கள் அனைவரின் ஒத்துழைப்பில் திருபவனியும் தொடர்ந்து புனித தோமா மன்றாட்டு மாலையும் பின் விருந்து பசரிப்பும் சிறப்பாக நடைபெற்றது. ஏற்பாட்டாளர் சகோதரர் புருட்டஸ் விழாவுக்கு உதவி புரிந்த அனைவருக்கும் பங்குத்தந்தைக்கும் நன்றி மாலை சூட்டினார்.

*ஆ.வி.டேவிட். குளுவாங்.*

## அமைதிக்காக செபிக்க பாத்திமா நகர் செல்கிறார் திருத்தந்தை

உக்ரைனிலும் உலகம் முழுவதிலும் அமைதி நிலவ செபிக்கும் நோக்கத்துடன் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் போர்த்துக்கல்லின் பாத்திமா நகர் திருத்தலத்திற்கு பயணம் செய்ய உள்ளார்.

ஆகஸ்ட் மாதத் துவக்கத்தில் போர்த்துக்கல்லின் லிஸ்பன் நகரில் உலக இளையோர் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள திருப்பயணம் மேற்கொள்ளும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அங்கிருந்து ஒரே ஒரு நாள் பாத்திமா திருத்தலத்திற்குச் சென்று உலக அமைதிக்காக, குறிப்பாக உக்ரைன் நாட்டிற்காக இறைவேண்டல் செய்யவும் உள்ளார். தற்போது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இரண்டாவது முறையாக பாத்திமா திருத்தலத்திற்கு செல்வதற்கு விருப்பம் தெரிவித்து, போர்த்துக்கல் லிஸ்பன் நகர் திருப்பயணத்தில் அதனை இணைத்துக் கொண்டார்.

**அடுத்த வாரம் ஜூலை 23, திருஅவையில் தாத்தா பாட்டிகள் தினம்**

## Peter’s Pence என்ற அமைப்பின் ஆண்டு வரவு செலவு அறிவிப்பு

திருத்தந்தைக்கு உலகெங்கிலும் விசுவாசிகள் வழங்கிய நிதியுதவியின் மொத்த தொகை 107 மில்லியன் யூரோக்கள் என்றும், இதில் 95.5 மில்லியன் யூரோக்கள் செலவு செய்யப்பட்டுள்ளன என்றும் 2022-ஆம் ஆண்டிற்கான Peter’s Pence என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

(வத்திக்கான் செய்தி)

# இறைவார்த்தையை வாசிப்போம், தியானிப்போம் அதில் வாழ்வோம்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 15-ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இன்று இறைவார்த்தை மற்றும் அதன் தன்மையை யொட்டி ஆண்டவர் எடுத்துரைக்கிறார்.

இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் விவசாயமும் கால்நடை வளர்த்தலும் முக்கியத் தொழில்களாக இருந்தன. ஆகவேதான் அவர்களின் சூழ்நிலைக்கேற்ப விவசாயிகள் பயன்படுத்தும் விதையைக் கொண்டு விண்ணரசு என்கிற பரிமாண விதையை அவர்கள் மனதில் விதைக்கிறார். விண்ணரசுக்கு ஏற்புடைய மக்களாக வாழ அழைப்பும் விடுக்கிறார். விதை விதைக்கிறவன் அவை நல்ல நிலத்தில் விழுந்து நல்ல பலன் தரவேண்டும் என்றுதான் விதைப்பான். விதைக்கும் விதையில் எந்தக் குறையும் இல்லை. ஆனால் அது விதைக்கப்படும் நிலங்களில்தான் குறைகள் காணப்படுகின்றன.

வழியோரம், பாறை நிலம், முட்செடி போன்ற இடங்களில் விழுந்த விதைகள் முளைத்தும் நல்ல பயன் தராது. நல்ல நிலத்தில் விழுந்த விதையோ பல மடங்கு பலன் தரும்.

வானிலிருந்து இறங்கிவரும் மழையும் பனியும் நிலத்தை நனைத்து, முளை அரும்பி விதைப்பவனுக்கு விதையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே ஆண்டவரின் வார்த்தை நம் உள்ளத்தில் விதைக்கப்பட்டு நல்ல பலனை அளிக்க வேண்டும்.

இறைவனின் வார்த்தை என்றுமே பலன் தராமல் போகாது. அது என்றும் நிலைக்கும். இயேசுவே வாழ்வு தரும் வார்த்தை. ஆண்டவரின் வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது என்பது கடவுளின் வெளிப்பாடு. இறைவார்த் தையை யாரும் தடுக்க முடியாது, முடிவுக்குக் கொண்டு வரவும் முடியாது. நிலம் எவ்வாறு இருந்தாலும் உயிருள்ள விதைகளாக விதைக்கப்பட்டு நிலத்தின் ஏற்றுக் கொள்ளும் தன்மைக்கு ஏற்ப பலன் தருவதைப் போல நல்ல உள்ளத்தில் விதைக்கப்படும் இறைவனின் வார்த்தையை யாராலும் தடுக்கவோ நிறுத்தவோ முடியாது. இறைவார்த்தை பற்றிக் கொள்ள திருத்தூதர்களையும் இன்று நம்மையும் உற்சாகப்படுத்துகிறார் இயேசு.

“புல் உலர்ந்து போகும். பூ வதங்கி விழும்” ஆனால் ஆண்டவரின் அருள்வாக்கு என்றும் நிலைத்திருக்கும் என்று திருவிவிலியம் கூறுகிறது. ஆண்டவரின் அருள்வாக்கை அறியவும், அறிந்தவற்றை வாழவும், வாழ்பவற்றை அறிவிக்கவும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆண்டவரின் உயிர் வார்த்தையை அனுதினமும் பக்தியோடும் நேர்மையான உள்ளத்தோடும் படித்துத் தியானித்துச் சிந்தித்து வாழ்ந்து வர வேண்டும் என்று திருஅவை இன்று நினைவுறுத்துகிறது. இறைவார்த்தை சாதாரண இறைமக்களை இறைவாக்கினர்களாகவும் திருத்தூதர்களாகவும், இறை பணியாளர்களாகவும் மாற்றியுள்ளதை வரலாற்றில் நாம் காண்கிறோம். புனித அன்னை திரேசா இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இத்தகைய ஆற்றல்மிக்க வார்த்தை நம் இதயத்தில் பற்றியெரியும் தீயைப்போல இருக்க வேண்டும். (எரே 20:9) இறைவார்த்தையை திறந்த மனதோடு நாம் ஏற்றுக் கொள்கிறோமா? நம்பிக்கை வைக்கிறோமா? அல்லது உள்ளத்தை இறுக மூடி வைத்துக் கொண்டு நிராகரிக் கிறோமா? என சிந்திப்போம்.

*-M. சவரிநாதன், சுங்கைபட்டாணி*

**ஆண்டின் பொதுக்காலம் 15-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | எசா 55: 10 -11 |
| பதி.பாடல் | 65: 9abc. 9d-10. 11-12. 13 2 |
| வாசகம் | உரோ 8: 18 -23 |
| நற்செய்தி | மத் 13 : 1 -23 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**